மக்கள் பீதி அடைந்து இரண்டு தினங்களாக சென்னை நகருக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். நல்ல இடமாக இருந்தும் ஏன் புறக்கணிக்கப்பட்டது என்று தெரியவில்லை. அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இந்த நிலைமையை கவனித்து பட்டப்படிப்புக்காக வசதியைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரங்களை இந்தச் சபை கொடுக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எந்த விதமான புது அதிகாரங்களும் கொடுத்ததாகத் தெரியவில்லை. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உள்ள அதிகாரம் குறைவு. அதிகப் படியான அதிகாரங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் நகரத்திலே பல மருத்துவ மனைகளில் இரண்டு மூன்று ஆண்டுகளாக மருத்துவ அதிகாரிகள் இல்லாத குறை இருப்பதால் அதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) : இத் தொடர் மன்றத்தின் இன்றைய மாலை நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. மறுபடியும் பேரவை நாளை காலை 9-00 மணிக்குக் கூடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது. பி. ப. 6–17

4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

202. *Notification issued with G.O. Ms. No. 1113, Public (Tamil Development I), dated 28th April 1967, regarding introduction of Tamil in respect of all official communications from certain offices under the Director of Agriculture specified in the notification. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956. (Madras Act XXIX of 1966.)]*

B. Reports, Notifications and Other Papers.

* 50. Annexure to the Madras General Sales Tax (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 6 of 1967).

† 51. The Madras Motor Vehicles Taxation (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 7 of 1967).

65006

* Placed on the Table of the House on 24th June 1967.

† Despatched to Members on 4th June 1967.